www.tamilarangam.net

Mon, May 24, 2010

செய்திகள் | பார்வை | ஆயிரம் பூக்கள் | முகங்கள் / நிறங்கள் | இனிது இனிது | பேசும்

முகப்பு » சுவடுகள்

# இந்திய - தமிழீழ புவிசார் அரசியல் முரண்! ஈழம்: கட்டுரைத் தெ 8

தாமரை காருண்யன்

**ஈழம் தோல்வி கண்டதா? தோற்கடிக்கப்பட்டதா?**



தமிழீழம் உலகப் பந்தில் ஒரு நாடாக அமைவதனை ஏன் இந்தியா விரும்பவில்லை? இந்தக் கேள்விக்கான பதிலைத் தமிழர் தேசம் எப்போது தேடத் தொடங்கியது?

இக் கேள்விகளுடன் கடந்த அங்கத்தை நிறைவு செய்திருந்தோம்.

தமிழீழம் உலகப் பந்தில் ஒரு நாடாக அமைவதனை ஏன் இந்தியா விரும்பவில்லை என்ற கேள்விக்குப் பதில் தேடுவதற்கு இந்தியாவின் புவிசார் அரசியலை இலங்கைத்தீவுடன் பொருத்திப் பார்க்க வேண்டும்.

இதற்குள் நுழைய முன்னர் தமிழீழ விடுதலைப் போராட்டத்துடன் தொடர்புபட்ட வகையில் புவிசார் சிந்தனைகள் தமிழர் தேசத்தின் மத்தியில் தோற்றம் பெற்ற வரலாற்றையும் சுருக்கமாக நோக்கிச் செ

தமிழீழம் குறித்த ஆணையினைப் பெற்ற அரசியல் தலைவர்கள் தேசியம், தாயகம், சுயநிர்ணயம், இ போன்ற பதாகைகளை முன்வைத்து தமிழீழம் குறித்து பேசினாலும் - தமிழீழ விடுதலைப் போராட்ட தத்துவார்த்த அடிப்படைகளாக அமையும் இக் கோட்பாடுகளைப் பற்றி ஆழ அகலமாக ஆராய்திருக்க

இதே போன்று தமிழீழம் தனி அரசாக அமைவதன் நடைமுறைச் சாத்தியம் குறித்து புவிசார் அரசிய இணைத்த சிந்தனை அறிவார்ந்த ரீதியில் இக் காலத்தில் எவராலும் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை

அப்போது இது தொடர்பாக இருந்த சிந்தனை நாம் கடந்த அங்கத்தில் குறிப்பிட்டிருந்த 15 வயதுச் சிறு சிந்தனையே.

1977 தேர்தல் காலகட்டத்தில் தமிழர் விடுதலைக்கூட்டணி செயலதிபர் அமிர்தலிங்கம் அவர்கள் தேர் கூட்டங்களில் பேசிய பேச்சொன்று 'வங்கம் தந்த பாடம்' என்ற ஒரு சிறு நூலாக வெளிவந்த ஞாபகம்.

1985 இல் தமிழீழ மக்கள் விடுதலை இயக்கம் (PLOTE) வெளியிட்டிருந்த 'வங்கம் தந்த பாடம்' நூலும் அமிர்தலிங்கம் அவர்களின் உரையாக வெளிவந்திருந்த 'வங்கம் தந்த பாடம்' நூலும் உள்ளடக்கத்தில் வேறானவை.

அமிர்தலிங்கம் அவர்களின் வாதம் நமது 15 வயது சிறுவனின் வாதத்தை ஒட்டியதாவே இருந்தது. சில வேளைகளில் இச் சிறுவனும் அமிர்தலிங்கம் அவர்களின் உரையில் இருந்துதான் தனது கருத்தை உருவாக்கியிருக்கவும் கூடும். 'வங்கத்தை எடுத்துக் கொடுத்த இந்தியா தமிழீழத்தையும் எடுத்துத் த இதுவே அமிர்தலிங்கம் அவர்களின் 'வங்கம் தந்த பாடம்'.